DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

| | |
|---|---|
| Calender Miscellaneous | C.**C.No. 257/2021** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution<br>Defence |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். யோகேஷ் (Pw.8) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day May of 2023

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை:–**

**1.** நான் தற்போது சென்னை மருத்துவக் கல்லூரி முதுநிலை மருத்துவ படிப்பு படித்து வருகிறேன். நான் 21.11.2018 ம் தேதி இரவு 11.30 மணியளவில் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது தனுஷ்கோடி என்பவர் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்சில் கொண்டு வந்தனர். அவரை நான் விசாரித்தபோது அடையாளம் தெரிந்த 6 முதல் 7 நபர்கள் தன்னை அவருடைய வீட்டின் அருகே வைத்து அன்றே 7.30 மணிக்கு தாக்கியதாக சொன்னார். அவர் நல்ல மனநிலையில் இருந்தார். அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். அவருக்கு இடது முழங்கையில் வீக்கம் இருந்தது. மேற்படி பரிசோதனையின்போது அவருக்கு அந்த இடத்தில் எலும்பு முறிவு இருந்ததாக தெரிய வந்தது. அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை

செய்யப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றுவழங்கினேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அதசாஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).

2. 22.11.2018 ம் தேதி 12.15(a.m) மணிக்கு பூமிநாதன் என்பவரை அவரது சகோதரர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் 6 முதல் 7 நபர்கள் தன்னை அவருடைய வீட்டின் அருகே வைத்து அன்றே 7.30 மணிக்கு தாக்கியதாக சொன்னார். அவர் நல்ல மனநிலையில் இருந்தார். அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. உடம்பில் வலி இருந்ததாக தெரிவித்தார். அவருக்கு தலைவலி இருப்பதாகவும் சொன்னார். அவருக்கு சிடிஸ்கேன் எடுக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அதசாஆ 3 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).

3. 22.11.2018 ம் தேதி 12.15(a.m) மணிக்கு இருளாயி என்பவரை அவரது சகோதரர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் 6 முதல் 7 நபர்கள் தன்னை அவருடைய வீட்டின் அருகே வைத்து அன்றே 7.30 மணிக்கு தாக்கியதாக சொன்னார். அவர் நல்ல மனநிலையில் இருந்தார். அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். அவருக்கு வலது முழங்கையில் வீக்கம் இருந்தது. அந்த இடத்தில் வலி மற்றும் வீக்கம் இருந்ததாக தெரிவித்தார். அவருக்கு எக்ஸ்ரே எடுத்து பார்த்தபோது சிறிய எலும்பு முறிவு இருப்பதாக தெரியவந்தது. பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அதசாஆ 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).

4. 22.11.2018 ம் தேதி 12.15(a.m) மணிக்கு முத்துராமன் என்பவர் தானாக சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் 6 முதல் 7 நபர்கள் தன்னை அவருடைய வீட்டின் அருகே வைத்து அன்றே 7.30 மணிக்கு தாக்கியதாக சொன்னார். அவர் நல்ல மனநிலையில் இருந்தார். அவரை

மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். அவருக்கு இடது கை வீக்கம் மற்றும் வலி இருந்தது. அவருக்கு எக்ஸ்ரே எடுத்து பார்த்தபோது அந்த இடத்தில் இடது புறங்கையில் 5 வது எலும்பு முறிவு இருப்பதாக தெரியவந்தது. பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அதசாஆ 5 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).

5. 21.11.2018 ம் தேதி இரவு 11.30 மணிக்கு ராமன் என்பவரை 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் 6 முதல் 7 நபர்கள் தன்னை அவருடைய வீட்டின் அருகே வைத்து அன்றே 7.30 மணிக்கு தாக்கியதாக சொன்னார். அவர் நல்ல மனநிலையில் இருந்தார். அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். அவருக்கு வெளிக்காயங்கள் இல்லை. வலி இருந்ததாக தெரிவித்தார். பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அதசாஆ 6 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).
சாட்சியத்தின்போது மருத்துவர் காயம் பட்ட சாட்சிகளில் டிஸ்சார்ஜ் சம்மரி அறிக்கையை சமர்பித்துள்ளார். (**அந்த அறிக்கை 5 எண்ணம் அதசாஆ 7 முதல் அதசாஆ 11 ஆக ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது**).

எ.த.கு.வி–

6. நான் கொடுத்துள்ள ஆவணத்தில் எ்க்ஸ்ரே கொடுக்கவில்லை என்றால் சரிதான். எக்ஸ்ரே ரிப்போர்ட் கொடுத்துள்ளேன். கொடுங்காயம் பட்ட முத்துராமன், தனுஷ்கோடி, இருளாயி ஆகிய மூவரின் எக்ஸ்ரே ரிப்போர்ட் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தனுஷ்கோடிக்கு வெளிகாயங்களான சிராய்ப்பு வெட்டுகாயங்கள் இல்லை என்றால் சரிதான். வீக்கம் வலி இருந்தது. வலி நடிப்பாக இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என்றால் இல்லை. தனுஷ்கோடி வலது கையில் காயம் இல்லை. தனுஷ்கோடிக்கு கூட்டத்தில் தள்ளு முள்ளுவில்

யாரோ ஒரு நபர் தள்ளிவிட்டு கிழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

7. பூமிநாதனுக்கு வெளிபுற காயங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி வலி காயம் பாவனையாக இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. இருளாயிக்கு வெளிகாயங்கள் இல்லை என்றால் சரிதான். வலது முழங்கையில் வீக்கம் வலி இருந்தது. அவருக்கு கூட்டத்தில் தள்ளு முள்ளுவில் யாரோ ஒரு நபர் தள்ளிவிட்டு கிழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். முத்துராம் என்பவருக்கு ஸ்கேன் எடுத்து பார்த்ததில் அவருக்கு இடது கை 5 வது விரலில் சிறிய எலும்பு முறிவு இருந்தது. அவருக்கு வீக்கம் வலி இருந்தது. வெட்டுக்காயம் சிராய்ப்பு காயம் இல்லை. ஒரு நபர் மற்றொரு நபரை அடிக்கும்போது அடிப்பட்ட நபர் தாங்கி பிடித்தால் உள்கையில் காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அவருக்கு மேல்பகுதி காயம் உண்டு. அவருக்கும் கூட்டத்தில் தள்ளு முள்ளுவில் யாரோ ஒரு நபர் தள்ளிவிட்டு கிழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் காயம் பட்ட நபர் சிறுவயதை சேர்ந்தவர் விழும்போது அவ்வாறு காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை. வண்டியில் இருந்து கிழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

8. ராமர் என்ற ராமசந்திரனுக்கு வெளிகாயங்கள் எதுவும் இல்லை. மேற்படி உடம்பு வலி நடிப்பாக கூட இருக்கலாம். முத்துராமனுக்கு கிழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 21.11.2018 ம் தேதி 11.35 மணிக்கு நான் மருத்துவமனையில் இருக்கும்போது 108 ஆம்புலன்சில் யாரை கூட்டி வந்தார்கள் என்றால் நாகன் த.பெ பெரியகருப்பன் என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவர் இரவு 11.35 மணிக்கு சிகிச்சைக்கு வந்தார். அவர் திருச்சுழி அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டு எண்.155 ன் படி காயங்களுடன் மேல்கிசிச்சைக்காக வந்தார். அவருக்கு எந்த இடத்தில் காயம் என்றால் இடதுமணிக்கட்டில் வீக்க காயம் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் இடது

முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதனால் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த ஆவணங்கள் என்னிடம் உள்ளது.

மறு விசாரணை –

9. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.